**முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு**

| வழக்கு எண் | GWOP | 154 | of | 2020 |
|---|---|---|---|---|

**2028-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22-ம் நாளான இன்று**

**வாதி/பிரதிவாதி மனுதாரர்/எதிர்மனுதாரர்** தரப்பில் ம.சா.1-வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திரு.பிரபாகரன் என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

| பெயர் | சரவணன் | தந்தை பெயர் | |
|---|---|---|---|
| கிராமம் | | கணவர் பெயர் | |
| ஜாதி | | தாலுக்கா | |
| | | சமயம் | |
| தொழில் | | வயது | |

**நாள்-22.04.2026**

**ம.சா.-1**

**குறுக்கு விசாரணை-**

நான் மனுவில் கண்ட விலாசத்தில் குடியிருக்கிறேன். என்னுடன் என்னுடைய பெற்றோர் வசிக்கிறார்கள். என் அப்பாவிற்கு 70 வயது ஆகும். என் தாயாருக்கு 65 வயது ஆகும். என் தனியார் கம்பெனியில் வேலை செய்கிறேன். நான் Tejas lab என்ற நிறுவனத்தில் மேனேஜராக பணிபுரிகிறேன். மாதம் ரூ. 25 ஆயிரம் சம்பளம் வருகிறது. என்னுடைய வேலை நேரம் காலை 9 முதல் மாலை 5 வரை ஆகும். Tejas lab வளசரவாக்கத்தில் உள்ளது. என் மகள் ஹன்சிகா 8 ம் வகுப்பு படிக்கிறார். என் மகள்

படிக்கும் வகுப்பின் ஆசிரியை பெயர் தற்போது ஞாபகம் இல்லை. என் மகளின் தோழி பெயர் தெரியாது. குழந்தையை பார்ப்பதற்கு visitation right மனு தாக்கல் செய்து உத்தரவு பெற்றுள்ளேன். நான் கடைசியாக போன வாரம் எதிர்மனுதாரர் வீட்டில் வெளியே வைத்து பார்த்தேன். அன்றைக்கு ஒரு மணி நேரம் குழந்தையோடு இருந்தேன். குழந்தை என்னிடம் பயந்து கொண்டுதான் வரும். அம்மா திட்டுவார் என்று சொல்லும். என் மகளின் பள்ளி கட்டணம் எதிர்மனுதாரர்தான் செலுத்துகிறார்.

குறுக்கு விசாரணை - வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu